**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

**அசல் வழக்கு எண். 188/2018**

நாள்: 22.04.2026.

பெயர்: ஜெயபாலன் (வா.சா.1) த/பெ: கலியன் (எ) கலியபெருமாள்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

**<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை...</u>**

1) மொட்டையன் மகன் கலியபெருமாள் என்பவர் தான் எனது தந்தை என்றால் சரிதான். முத்து மகன் கலியபெருமாள் என்பவர் பிரதிவாதிகளின் தந்தை என்றால் சரிதான். வா.சா–ஆ.9 எனது தந்தை மொட்டையன் மகன் கலியபெருமாள் எனது அண்ணன் மருதமுத்துவிற்கு எழுதிக்கொடுத்ததாக தாக்கல் செய்த ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.9 ஆவணத்துடன் இணைக்கப்பட்டுள்ள கணினி பட்டாவில் மு.கலியபெருமாள் என்று தான் உள்ளது என்றால் சரிதான். மு. கலியபெருமாள் என்றால் முத்து மகன் கலியபெருமாள் என்று தான் அர்த்தம் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பட்டாவில் உள்ள பெயர் மு.கலியபெருமாள் என்பது பிரதிவாதிகளின் தந்தை முத்து மகன் கலியபெருமாள் என்பவரை குறிக்கிறது என்றால் சரியல்ல. மேற்படி பட்டாவின்படி அதில் குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் பிரதிவாதிகளின் தந்தைக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல.

2) என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.9 ல் 2 ம் பக்கத்தில் எழுதிக்கொடுப்பவரின் பெயர் மொட்டையன் மகன் கலியபெருமாள் (எ) கலியன் என்று தான் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.9 ல் எழுதிக்கொடுத்தவரின் தந்தை பெயரும், அதனுடன் இணைத்துள்ள கணினி பட்டாவில் உள்ளவரின் தந்தை பெயரும் வெவ்வேறாக உள்ளது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிகளின் தந்தை பெயரில் உள்ள பட்டாவில் உள்ள பெயர் ஒற்றுமையை பயன்படுத்தி ஆள்மாறாட்டமாக எனது தந்தை எனது அண்ணனுக்கு மோசடியாக வா.சா.ஆ.9 யை ஏற்படுத்திக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. பட்டாவில் உள்ள பட்டாதாரரின் தந்தை பெயர் தவறுதலாக இருந்திருந்தால் அதனை திருத்த எனது தந்தை நடவடிக்கை எடுத்திருப்பார், அவ்வாறு இல்லாத காரணத்தினால் தான்

நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9 ஆள்மாறாட்டம் செய்து மோசடியாக ஏற்படுத்தப்பட்ட காரணத்தினால் அதன்படி எனது அண்ணனுக்கு எவ்வித உரிமையும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது அண்ணனுக்கு உரிமை இல்லாத போது அவர் எனக்கு எழுதிக்கொடுத்த வா.சா.ஆ.4 ஆவணமும் செல்லாது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நான் சட்டப்படியான அனுபவத்தில் இல்லை என்றாலும், நான் ஆக்கிரமித்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் ஆக்கிரமிப்பாளர் என்பதால் தாவா 1ம் இன சொத்தை பிரதிவாதிகளிடம் ஒப்படைக்க நான் கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

3) 2ம் இன சொத்தைப் பொறுத்து மட்டும் தான் எங்கள் குடுப்பத்திற்கு பாத்தியப்பட்டது என்றாலும், 1ம் இன சொத்தைப் பொறுத்து எங்கள் குடும்பத்திற்கு எவ்வித தொடர்பும் இல்லை என்றாலும் சரியல்ல. தாவா இரண்டு இன சொத்துக்களுக்கும் வருவாய் துறையில் தவறாக பிரதிவாதிகளின் தந்தை பெயரை பட்டா ஏற்பட்டுவிட்டது, அதனை சரிசெய்ய பிரதிவாதிகள் தயாராக இருந்தார்கள், எனினும் பிரதிவாதிகளின் சொத்தையும் சேர்த்து அபகரிக்க வேண்டி வா.சா.ஆ.9 யை எனது தந்தை எனது அண்ணனுக்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. தாவா 1ம் இன சொத்து பிரதிவாதிகளுக்கானது என்பதிலும், தாவா 2ம் இன சொத்து எங்களுக்கானது என்பதிலும் பிரதிவாதிகளுக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரியல்ல. நான் வீண் விவகாரத்திற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதால், இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்/க.ஜெயபாலன்/

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்லி, என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சிடப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டி, அவரால் சரி என ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

ஒப்பம்/ம.சி. கண்ணதாசன்/
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.